பா.ஜ.க.வின் அறிவிக்கப்படாத எமர்ஜென்சி

காங்கிரசின் இரட்டை வேடம் - த.வெ.க. தகிடுதத்தம்!

அவர் 25 வயது பெண். சாஃப்ட்வேர் இன்ஜினியராகப் பணியாற்றுகிறார். அதிகாலை 5 மணிக்கு ஃபரிதாபாத்தில் உள்ள வீட்டிலிருந்து யாருக்கும் தெரியாமல் புறப்படுகிறார். குறிப்பாக, அவரது அம்மா விழித்துவிடக்கூடாது என்ற கவனத்துடன் கதவைத் திறந்து, பூனை போல நடந்து, தெருவுக்கு வந்து, ஒரு வாடகைக் கார் பிடித்து டெல்லியின் ஜந்தர் மந்தர் பகுதிக்கு வந்து சேர்கிறார் அந்தப் பெண்.

63 வயது நிறைந்த பெண்மணி தனது 36 வது வயது மகளுடன் முதல் நாள் இரவே குருகிராம் வீட்டிலிருந்து புறப்பட்டு டெல்லிக்கு வந்துவிட்டார். மாணவர்கள் பலரும் அவரைப் போலவே வந்து கொண்டிருந்தனர். அசாமிலிருந்து டெல்லிக்கு வந்த மாணவியால் தலைநகரின் கெடுபிடிகளைக் கடந்து ஜந்தர் மந்தர் பகுதிக்குச் செல்வது பெரும் சவாலாக இருந்தது.

ஹசரத் நிஜாமுதீன் ரயில் நிலையத்தில் எல்லைப் பாதுகாப்பு படை வீரர்கள் குவிக்கப் பட்டிருந்தனர். ரயில் நிலையத்தின் வாசலில் காத்திருந்த டாக்ஸி டிரைவர்களும், உள்ளே இருந்த போர்ட்டர்களும் எந்த ரயிலும் இயங்காத நிலையில் தங்கள் வயிற்றுப்பாட்டுக்கு வழி என்ன என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். புதுடெல்லிக்குள் நுழைவதற்கான ஒவ்வொரு வழித்தடத்திலும் போலீஸ் குவிக்கப்பட்டிருந்தது. மாணவர்கள், இளைஞர்கள், பொதுநலச் செயற்பாட்டாளர்கள், சூழலியல் ஆர்வலர்கள், பொது மக்கள், அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட அத்தனை பேருக்குமே டெல்லிக்குள் நுழைவது பெரும் சவாலாக இருந்தது.

எஸ்.ஐ.ஆர் எனப்படும் சிறப்பு வாக்காளர் சீரமைப்பு முறையால் பொதுமக்களின் வாக் குரிமையைப் பறித்து, மோசடியாகத் தேர்தல் நடத்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து டெல்லி ஜந்தர் மந்தரில் அக்டோபர் 10ஆம் தேதி நடந்தப் போராட்டத்தைத் தடுப்பதற்காகத்தான் ஒன்றிய பா.ஜ.க அரசு, போர்ப் பதற்றம் போன்ற சூழலை உருவாக்கியிருந்தது.

எந்தப் பக்கம் திரும்பினாலும் போலீஸ் மற்றும் துணை ராணுவத்தினரின் தலைகள்தான். இத்தனைக்கும், தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிராக நடந்தது, அரசியல் சட்டம் வழங்கியுள்ள நெறிமுறைகளின்படியான அறவழிப் போராட்டம். அதை ஒடுக்கு வதற்காகத்தான் இத்தனைக் கெடுபிடிகள்.

ஜந்தர்மந்தர் 2.0 போராட்டத்தை முன்னெடுத்த கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் தலைவர் அபிஜித் திப்கே, துணை ஒருங்கிணைப்பாளர் சவுரவ் தாஸ் உள்ளிட்டோர் மும்பையிலிருந்து டெல்லிக்கு வந்த விமானம் தரையிறங்கியதுமே, விமானத்திற்குள் புகுந்து அவர்களைக் கைது செய்தது காவல் துறை. விமான நிலைய நெறிமுறைகளுக்கு மாறான வகையில் நடந்த இந்தக் கைது, ஏர் இந்தியா விமான அதிகாரிகள் உள்பட பலரையும் அதிரவைத்தது.

போராடியவர்கள் சட்டத்திற்குட்பட்டு நடந்து கொண்டார்கள். போராட்டத்தை ஒடுக்குவற்காகக் களமிறக்கப்பட்ட அரசின் பாதுகாப்புப் படையினர் சட்டத்தைப் பூட்ஸ் காலால் மிதித்தனர். செய்தி சேகரித்த ஊடகத்தினர், அதிலும் குறிப்பாகப் பெண் செய்தியாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களைக் கைது செய்து வாகனத்தில் ஏற்றும்போது காவல் துறை அதிகாரிகள் கடைப்பிடித்த முறை சொல்லக்கூசும் அளவுக்கு இருந்தது. அகில இந்திய மாணவர் சங்கத் தலைவர் நேரா போராவின் செயல்பாடுகளை எப்படியாவது முடக்கிவிட்டால், மொத்தப் போராட்டக் கூட்டத்தையும் விரட்டிவிடலாம் என நினைத்து டெல்லிப் போலீஸ் செயல்பட்டது.

பாதுகாப்பு என்ற பெயரில் ஊடுருவிய இந்துத்வா அமைப்பினரின் வன்செயல்கள் வீடியோ ஆதாரங்களாக வெளியாகி வைரலாயின. போலீசார் முன்னிலையிலேயே போராட்டக்காரர் ஒருவரை 5 பேர் கொண்ட கும்பல் தாக்குவதும், அவரைக் காப்பாற்ற வந்த பெண்ணை தூக்கிக் கீழே வீசி, பின்னர் தாக்குவதும் அந்த வீடியோவில் பதிவாகியிருந்தது. இது தொடர்பாக 5 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், இந்து ரக் ஷா தள் அமைப்பின் தலைவர் பிங்கி சவுத்ரி என்பவர் அவர்கள் தங்கள் அமைப்பினர் என்றும், அவர்களுக்குப் பாதுகாப்பு தேவை என்றும் வெளிப்படையாகக் கேட்டிருக்கிறார்.

அமைதியாகக் கூடி, அறவழியில் நடைபெறும் போராட்டத்தை ஒடுக்குவதற்கு போர்க்காலப் பதற்றம் போன்ற சூழல் உருவாக்கப்பட்டதால்தான், "அறிவிக்கப்படாத எமர்ஜென்சி" என்று இதனை விமர்சித்து, தன் கண்டனத்தைப் பதிவு செய்தார் திராவிட நாயகர் நம் கழகத் தலைவர் அவர்கள். எஸ்.ஐ.ஆர். மோசடி குறித்து முதன் முதலில் விழிப்புணர்வை ஏற்படுத்தியதும், தகுதியுள்ள ஒரு வாக்காளர் பெயர்கூட விடுபடக் கூடாது என்று தி.மு.க.வினரைக் களமிறக்கிச் செயல்பட வைத்ததும், சட்டமன்றத் தேர்தல் நடை பெற்ற மாநிலங்களில் நடந்த எஸ்.ஐ.ஆர். மோசடிகள் குறித்த செய்தி ஊட கங்களில் வெளியானதுமே இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும் என்று முதல் குரல் கொடுத்தவரும் கழகத் தலைவர் அவர்கள் தான்.

இந்தியத் தலைநகரில் மாணவர்களும் இளைஞர்களும் ஜனநாயகம் காக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அதே நாளில், சென்னையிலும் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் மாணவர் அமைப்புகள் தங்கள்



கோவி.லெனின்
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

போராட்டத்தை முன்னெடுத்தன. சென்னை பெசன்ட் நகரில் கூடிய மாணவர்களையும் இளைஞர்களையும் த.வெ.க. அரசின் காவல்துறை ஒரு மண்டபத்தில் சிறை வைத்தது.

உரிமைகளுக்காகப் போராடும் மாணவர்களை த.வெ.க அரசு கைது செய்வது இது முதல்முறையல்ல. 'நீட்' தேர்வுக்கு எதிரானப் போராட்டத்தின்போதும் மாணவர் அமைப் பினரைத் தீவிரவாதிகள் போல இழுத்துச் சென்று வேளில் ஏற்றியது. இடதுசாரி மாணவர் இளைஞர் அமைப்புகளின் செயல்பாடு களைக் கல்வி நிலையங்களில் அனுமதிக் கக்கூடாது என்று கல்லூரிக் கல்வி இயக்கம் மூலமாக சுற்றறிக்கை வெளியிட்டதும் த.வெ.க அரசுதான். எஸ்.ஐ.ஆர் மோசடிக ளுக்குக் காரணமானத் தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலகக் கோரி நடந்த போராட்டத்தையும் முடக்கிடும் வகையில், காலையிலேயே கைது நடவடிக்கைகளைத் தொடங்கிவிட்டது த.வெ.க அரசு.

மாணவர்களும் இளைஞர்களும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தவுடனேயே கழகத் தலைவர் அவர்கள் இது குறித்து, கழக நிர்வாகிகளுக்குத் தெரிவித்து, அறவழியில் போராடுபவர்களுக்கு ஆதரவாகக் கழகம் உறுதியாக நிற்கிறது என்பதை நேரில் உணர்த்திடச் செய்தார்.

அதன்படி, கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் விரைந்து சென்று, கைது செய்யப்பட்டிருந்தவர்களைச் சந்தித்து, போராட்டத்திற்கு கழகத்தின் ஆதரவைத் தெரிவித்ததுடன், அவர்களை விடுவிக்கும் வரை இங்கு தான் இருப்போம் என உறுதியளித்து, மண்டபத்தின் வாசலிலேயே தரையில் அமர்ந்து, போராட்டக்காரர்களை விடுவிக்கும்படி முழக்கங்கள் எழுப்பினர்.

தி.மு.க. நிர்வாகிகள் களமிறங்கியதால் காவல்துறை தயங்கியது. கைதானவர்களை விடுவிக்க முடிவு செய்தது. மதியப் பொழுதிற்குள் அவர்கள் அனைவரும் விடு விக்கப்பட, வாசலில் உட்கார்ந்து தங்களுக்காக முழக்கம் எழுப்பிய தி.மு.க. நிர்வாகி களுக்கு அவர்கள் நன்றி தெரிவித்துவிட்டுச் சென்றனர். தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிராக டெல்லியில் நடக்கின்ற போராட்டமாக இருந்தாலும், சென்னையில் நடக்கின்ற போராட்டமாக இருந்தாலும் எங்கள் நிலைப்பாடு ஒன்றுதான் என்பதைச் செயலில் உணர்த்திக்காட்டியது திராவிட முன்னேற்றக் கழகம்.

அக்டோபர் 10 அன்று இந்தியத் தலைநகரில் மாணவர்கள் இளைஞர்களின் தன்னெழுச்சியானப் போராட்டம் நடை பெற்ற நாளில், தாங்களும் எஸ்.ஐ.ஆரை எதிர்க்கிறோம் என்று சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் கட்சியின் எம்.பி.யும், மக்களவை எதிர்க் கட்சித் தலைவருமான ராகுல்காந்தி, அங்கே இல்லாமல் சென்னைக்கு வந்து விட்டார். மம்தாபானர்ஜி, அரவிந்த் கெஜ்ரிவால், இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் டெல்லியில் மாணவர்களுக்கு ஆதரவாக இருந்து, பா.ஜ.க அரசால் கைது செய்யப்பட்ட நிலையில், ராகுல்காந்திக்கு சென்னையில் அப்படி என்ன வேலை?

சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் 5 சீட்டுகளை வென்று, அடுத்தநாளே த.வெ.க பக்கம் தாவிய நன்றிக்கெட்டத்தனத்தை மேலும் உறுதி செய்யும் வகையில், டெல்லி குலுங்கிட போராட்டம் நடந்த நாளில், விஜய்யுடன் சென்னையில் ஒரு காபிக் கடையில் உட்கார்ந்து உறிஞ்சிக் கொண்டிருந்தார் ராகுல்காந்தி. எந்த விஜய்? எஸ்.ஐ.ஆருக்கு எதிராகப் போராடிய மாணவர்களைக் காலையில் கைது செய்த ஆட்சியை நடத்துகிற அதே விஜய்தான். காங்கிரசின் இரட்டை வேடத்தை ராகுல்காந்தியே வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டார்.

முதலாளியான ஒன்றிய அரசின் மனம் நோகாதபடி சேவகம் செய்வதில் பா.ஜ.க ஆளும் மாநில அரசுகளை மிஞ்சி நிற்கிறது விஜய்யின் த.வெ.க. அரசு. தமிழ்நாட்டில் போராட்ட உரிமைகளை முற்றிலும் பறிக்கின்ற வகையில் கடந்த 5 மாதங்களாகக் காவல்துறையின் தொடர் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. சென்னையில் தொடங்கி நாமக்கல் வரை பல ஊர்களிலும் தூய்மைப் பணியாளர்களின் போராட்டங்களைக் காவல்துறை கொண்டு முடக்கியது த.வெ.க அரசு. செவிலியர்களின் போராட்டத்தையும் ஒடுக்கியது. பன்னோக்கு மருத்துவப் பணியாளர்கள் தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடுவதற்கும் அனுமதி யில்லை.

போராட்டத்தில் பங்கேற்பதற்காக வீட்டிலிருந்து புறப்பட்ட மருத்துவப் பணியாளர்களை அங்கேயே தடுத்து, வீட்டுக்காவலில் வைத்தது த.வெ.க அரசின் காவல்துறை. பாத்ரூம் செல்வதற்குக்கூட அனுமதிக்காமல், மருத்துவப் பணியாளர்களை விரட்டிச் சென்று கைது செய்தது. "மக்களுக்கு ஒன்று என்றால் இந்த விஜய் நிற்பான்" என்று பஞ்ச் டயலாக் பேசிய விஜய்யின் ஆட்சியில் ஜனநாயகம் பஞ்சர் ஆகிக்கிடக்கிறது.

தி.மு.க. ஆட்சியில் திட்டமிடப்பட்டு, ஒன்றிய அரசிடம் நிதிக்காகப் போராடி, மாநில நிதியில் கட்டமைக்கப்பட்ட சென்னை மெட்ரோ இரண்டாவது கட்டத் திட்டத்தை, நிதி தராத அரசின் பிரதமரும், நிர்வாகத் திறனில்லாத அரசின் முதல்வரும் சேர்ந்து தொடங்கி வைத்தார்கள். அந்த விழாவில் வைக்கப்பட்டிருந்த வள்ளுவருக்கு காவிச் சாயம் பூசப்பட்டிருந்தது. பா.ஜ.க வேறல்ல, த.வெ.க வேறல்ல என்பதன் அடையாளம் தான் அது. தகிடுதத்த ஆட்சியில் தமிழ்நாடு தனது தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களையும், ஜனநாயக உரிமைகளையும் ஒவ்வொரு நாளும் இழந்து கொண்டிருக்கிறது.

நாகர்கோவிலில் 26 கிராமப் பகுதிகளுக்கு

நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க வலியுறுத்தி முற்றுகைப் போராட்டம்!

எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. அறிக்கை!

நாகர்கோயில் அக். 14-

நாகர்கோவில் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட 26 கிராமங்கள் வழியாக இயங்கி வந்த பேருந்துகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. இதனை முறையாக இயக்க கேட்டு வரும் 27 ஆம் தேதி முற்றுகைப் போராட்டம் மேற்கொள்ள இருப்பதாக நாகர்கோவில் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் அறிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

சட்டமன்ற தேர்தல் முடிந்த பிறகு நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட அனைத்து கிராம பகுதிகளுக்கும் மக்கள் சந்திப்பு என்ற அடிப்படையில் நேரடியாக பொதுமக்களை சந்தித்து அவர்களது குறைகளையும், கோரிக்கைகளையும், கேட்டறிந்தேன். அந்த அடிப்படையில் நாகர்கோவில் பேருந்து நிலையத்தில் இருந்து ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரி வழியாக ஏ. என் குடி பருத்திவிளை சந்திப்பு இராஜாக்கமங்கலம் சந்திப்பு அளத்தங்கரை முருங்கவிளை வரை புதிய பேருந்து விட வேண்டும்.

நாகர்கோவில் பேருந்து நிலையத்தில் இருந்து புளியடி ஊருக்கு புதிய பேருந்து விட வேண்டும். நாகர்கோவில் ஆசாரிபள்ளம் மருத்துவமனை மருத்துவக்கல்லூரி வழியாக அனந்தநாடார் குடியிருப்பு காரவிளை இராஜாக்கமங்கலம் வழியாக மண்டைக்காடு வரை தடம் எண் 36ஜி பேருந்து ஓடிக் கொண்டு இருந்தது. அதனை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அந்த பேருந்தை மீண்டும் விட வேண்டும்.

தடம் எண் 5எல்நாகர்கோவில் இருந்து அழிக்கால் வரை சென்று கொண்டு இருக்கிறது. அந்த பேருந்தை அழிக்காலில் இருந்து வெள்ளமோடி, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தளவாய்புரம் வெள்ளிச்சந்தை வழியாக நாகர்கோவிலுக்கு விட வேண்டும். நாகர்கோவிலில் இருந்து அழகன் விளை ஊருக்கு புதிய பேருந்து விட வேண்டும். 360 என்ற வழித்தட பேருந்து ஆசாரி பள்ளம் மருத்துவமனை மருத்துவ கல்லூரி வழியாக அனந்தநாடார் குடியிருப்பு காரவிளை எள்ளுவிளை ஆடராவிளை தர்மபுரம் இராஜாக்க மங்கலம் துறை, இராஜாக்கமங்கலம் சந்திப்பு வரை செல்ல பேருந்து விட வேண்டும். (ஏற்கனவே தடம் எண் 36ஜிபேருந்து ஓடி கொண்டு இருந்தது.)

நாகர்கோவில் பண்டாரத்தோப்பு வழியாக செல்லும் 31ஏபேருந்து கூடுதலாக காலை 6.30 மணிக்கும், மதியம் 1.30 மணிக்கும், இரவு 7.30 மணிக்கும் இயக்க வேண்டும். (இந்த பேருந்து காலையும் மாலையும் மட்டும் ஓடி கொண்டு இருக்கிறது.). நாகர்கோவிலில் இருந்து வடசேரி பார்வதிபுரம் களியங்காடு பண்டாரத்தோப்பு அழகர் கோணம் அமிர்தா கல்லூரி இறச்சகுளம் புத்தேரி வழியாக புதிய பேருந்து விட வேண்டும். நாகர்கோவிலில் இருந்து தாழையான் கோணம் ஊருக்கு 12எச் 12ஏ. வி.என்ற இரண்டு பேருந்து இயங்கி கொண்டிருந்தது. தற்போது இந்த இரண்டு பேருந்தும் நிறுத்தப்பட்ட தாகவும், தெரிகிறது அந்த பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டும்.

நாகர்கோவிலில் இருந்து வடசேரி பார்வதிபுரம் ஆசாரிபள்ளம் பெருவிளை பெரும்செல்வவிளை வேம்பனூர் மேலசங்கரன்குழி வடலிவிளை இராஜாக்கமங்கலம் வழியாக பி.எச்.எஸ் 6 என்ற பேருந்து இயங்கி கொண்டிருந்தது. அது தற்போது நிறுத்தி வைக்க பட்டுள்ளது. அதனை மீண்டும் இயக்க வேண்டும். நாகர்கோவிலில் இருந்து எள்ளுவிளை ஊருக்கு எஸ்/டி39 என்ற பேருந்து இயங்கி கொண்டு இருந்தது. தற்போது அந்த பேருந்தை நிறுத்தி வைக்க பட்டுள்ளது. அதனை மீண்டும் இயக்க வேண்டும்.

தடம் எண் 31 பேருந்து ஏற்கனவே ஓடி கொண்டு இருந்த வழி தடத்தில் மீண்டும் இயக்க வேண்டும். நாகர்கோவிலில் இருந்து தடம் எண் 40 பேருந்து ஈத்தாமொழி பூமி பாதுகாப்பு சங்கம் எதிரே உள்ள சாலை வழியாக பாப்பாளி கொம்பேஸ்வரஸ் ஆலயம் இராஜாக்கமங்கலம் துறை கீழ ஊர்



இராஜாக்கமங்கம் துறை மேலவூர் வழியாக 3 தடவை மட்டும் சென்று கொண்டு இருக்கிறது. அதனை முழு நேரமாக இயக்க வேண்டும். தடம் எண் 302 பேருந்து நீரோடி முதல் மணக்குடி செல்லும் பேருந்து கடற்கரை சாலை மெயின் ரோடு வழியாக இராஜாக்கமங்கலம் சந்திப்பு செல்கிறது. அப்பேருந்தை மெயின் ரோட்டில் இருந்து அளத்தங்கரை முருங்கவிளை ஊர் வழியாக செல்லவேண்டும். தடம் எண் 40 பேருந்து மிகவும் பழமை வாய்ந்த பேருந்து அப்பேருந்து அடிக்கடி பழுது ஏற்பட்டு பல மணி நேரம் பேருந்து ஊருக்கு வராமல் இருக்கிறது. அதனால் பள்ளி மாணவ, மாணவிகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். இதனால் பேருந்தை மாற்றி புதிய பேருந்து விட வேண்டும்.

நாகர்கோவில் பிள்ளைத்தோப்பு 5டி/39 என்ற பேருந்து இயங்கி வந்த நிலையில் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனை மீண்டும் இயக்க வேண்டும். மேலும் ஓடி கொண்டு இருக்கும் 5எப். பி. ஜி. ஜி பேருந்தை முழு நேர பேருந்தாக இயக்க வேண்டும். தடம் எண் 12எம்பேருந்து நாகர்கோவில் இராஜாக்கமங்கலம் கணபதிபுரம் பூச்சிக்காடு வழியாக சென்று கொண்டு இருக்கும் பேருந்தை முழு நேர பேருந்தாக இயக்க வேண்டும்.

தடம் எண் 38என்பேருந்து நாகர்கோவில் ஈத்தாமொழி புதுக்குடியிருப்பு வழியாக நெடுவிளைக்கு கூடுதலாக காலை 8.15 மணிக்கும், மாலை 4.15 மணிக்கும் விட வேண்டும். நாகர்கோவிலில் இருந்து வடக்கு கன்னக்குறிச்சி ஊர் வழியாக திங்கள் நகர் செல்லும் தடம் எண் 12எல். வி பேருந்து தினமும் 3 டிரிப் சென்று கொண்டு இருக்கிறது. அப்பேருந்தை 4 டிரிப் இயக்க வேண்டும். மேலும் இப்பேருந்து ஞாயிற்றுக்கிழமை வடக்கு கன்னக்குறிச்சி ஊருக்கு செல்வது இல்லை. அதனால் ஞாயிற்றுக்கிழமையும் இயக்க வேண்டும்.

நாகர்கோவிலில் இருந்து பிள்ளைத்தோப்பு ஊருக்கு செல்லும் தடம் எண் 5டி/39 பேருந்து தற்போது முற்றிலுமாக நிறுத்தி வைக்க பட்டுள்ளது. அதனை மீண்டும் இயக்க வேண்டும். நாகர்கோவிலில் இருந்து விளாத்திவிளை ஊர் வழியாக இயங்கும் 38இ பேருந்து படிக்கட்டு மிகவும் உயரமாக இருப்பதால் வயதானவர்கள் பேருந்தில் ஏற, இறங்க மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனால் அப்பேருந்தை மாற்றி புதிய தாழ்தள பேருந்து இயக்க வேண்டும்.

தடம் எண் 12இ பட்டர் விளை பேருந்து தாழையான் கோணம் வழியாக காலையும், மாலையும் சென்று வந்து கொண்டு இருக்கிறது. அப்பேருந்தை கூடுதலாக 1 டிரிப் விட வேண்டும். தடம் எண் 39, 39வி பிள்ளைத்தோப்பு செல்லும் பேருந்து மிகவும் பழமை வாய்ந்த பேருந்தாக உள்ளது. அதனை மாற்றி புதிய பேருந்து விட வேண்டும்.

நாகர்கோவிலில் இருந்து பிள்ளைத்தோப்பு செல்லும் தடம் எண் 5டி/39 ஓடி கொண்டு இருந்த பேருந்து (ஓய்வு பேரூந்து)தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனை மீண்டும் இயக்க வேண்டும். நாகர்கோவிலில் இருந்து இரவு 11 மணிக்கு பிள்ளைத்தோப்புக்கு செல்லும் தடம் எண் 40 பேருந்து கணபதிபுரம் என பெயர்பிறை வைத்து வருகிறது அதை பிள்ளைத்தோப்பு என மாற்ற வேண்டும்.

மேற்கண்ட 26 கிராமங்களில் பெரும்பான்மை கிராமங்களில் ஓடிக் கொண்டு இருந்த பேருந்துகளை ஒரு சில பேருந்துகளை நீட்டித்து கொடுப்பதற்கும் இராஜாக்கமங்கலம் முருங்கவிளை ஊர் மயான சுவாமி கோவில் அருகே புதிய பேருந்து நிறுத்தம் செய்யவும், ஒருசில கிராமங்களில் புதியதாக பேருந்து விடுவதற்கும் மொத்தமாக 26 பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை இரண்டு மாதங்களுக்கு முன்பாக நகர்கோவில் அரசு போக்குவரத்துக்கு கழக மேலாளர் மற்றும் நிர்வாக இயக்குனர், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் கடிதம் கொடுக்கப்பட்டது. பல முறை நான் பொது மேலாளரை வலியுறுத்திய பிறகும் இதுவரை எந்த நடவடிக்கையும் போக்குவரத்து நிர்வாகம் மேற்கொள்ள வில்லை.

வரும் 26.10.2026 க்குள் பேருந்துகளை மேற்படி வழித்தடங்களில் மீண்டும் இயக்கப்படாவிட்டால் பொதுமக்கள் நலன் கருதி 27.10.2026 அன்று காலை 10 மணிக்கு அந்த கிராம பொது மக்களோடு இணைந்து ராணித்தோட்டம் அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60 அடிக்கு கீழ் குறைந்தது

தமிழ்நாட்டில் குடிநீர் பஞ்சம் ஏற்படும் அபாயம்!

டெல்டா பாசனத்திற்கான நீர் திறப்பு நீட்டிக்க வாய்ப்பு இல்லை

தஞ்சை, அக்.14-

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60 அடிக்கு கீழ் குறைந்துள்ளதால், டெல்டா பாசனத்திற்கு திறப்பு நீட்டிக்கப்படாத சூழல் உருவாகியுள்ளது.

காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கக்கூடிய மேட்டூர் அணையில் இருந்து ஆண்டு தோறும் ஜூன் 12ம் தேதி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். ஆனால், த.வெ.க. அரசு கர்நாடகாவில் இருந்து நீரை பெற முடியாமல், 80 நாட்கள் காலதாமதத்திற்கு பிறகு செப்டம்பர் ஒன்றாம் தேதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. காலதாமதமாக திறந்தாலும் 100 நாட்கள் தங்களுக்கு தண்ணீர் தேவைப்படும் என்று டெல்டா மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்த நிலையில் அரசின் சார்பில் 45 நாட்கள் மட்டுமே தண்ணீர் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதனால் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட;g பட்டாலும் கடை மடை வரை நீர் சென்றடையாததால் விவசாயம் பொய்த்துப் போய் உள்ளது. இச்சூழலில் தற்போது நீர்வரத்து மிகவும் சரிந்து வினாடிக்கு 892 கன அடி நீர் மட்டுமே வந்து கொண்டுள்ளது.

இதனால், நீர்மட்டம் படிப்படியாக குறைந்து இன்று காலை 60 அடிக்கு கீழே வந்துள்ளது.